# காரணப்பெயர்

ஏதேனும் ஒரு காரணத்தைக் கருதி ஒரு பொருளுக்கு வழங்கும் பெயர் காரணப்பெயர்.

# நாற்காலி



நான்கு கால்களை உடையதால் நாற்காலி என்று அழைக்கப்படுகிறது.

# முக்கோணம்



மூன்று கோணங்களை உடையதால் முக்கோணம் என்று அழைக்கப்படுகிறது.

# வண்ணத்துப்பூச்சி



பல வண்ணங்களை உடையதால் வண்ணத்துப்பூச்சி என்று அழைக்கப்படுகிறது.

# பறவை



பறந்து செல்வதால் பறவை என்று அழைக்கப்படுகிறது.

# வானூர்தி




வானில் ஊர்ந்து செல்வதால் வானூர்தி என்று அழைக்கப்படுகிறது.

# முடி



முடியப்படுவதால் முடி என்று அழைக்கப்படுகிறது.

# கருவிழி



கருமை நிறமுடைய விழியாதலால் கருவிழி என்று அழைக்கப்படுகிறது.

# வளையல்



வளைந்து காணப்படுவதால் வளையல் என்று அழைக்கப்படுகிறது.

# தேனீ



தேனைச் சேகரிக்கும் ஈ ஆதலால் தேனீ என்று அழைக்கப்படுகிறது.

# குடைமிளகாய்



குடை போன்ற வடிவத்தில் காணப்படுவதால் குடைமிளகாய் என்று அழைக்கப்படுகிறது.

# செய்தித்தாள்




செய்திகளைத் தாங்கி நிற்கும் தாள் செய்தித்தாள் என்று அழைக்கப்படுகிறது.

# இளநீர்



இளம் தேங்காயில் உள்ள நீராதலால் இளநீர் என்று அழைக்கப்படுகிறது.

# மூக்குத்தி



மூக்கில் துளையிட்டு அணிவதால் மூக்குத்தி என்று அழைக்கப்படுகிறது.